சுருக்கம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நான்கு ஜோடி சீருடை வழங்குதல், சீருடை அளவினை உயர்த்தி வழங்குதல் மற்றும் சீருடைகள் தைக்க தையற்கூலி உயர்த்தி வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி(எஅ.2–2)த்துறை

அரசாணை (நிலை) எண்.37 நாள்: 15.2.2008

திருவள்ளுவராண்டு 2039
சர்வஜித், மாசி 3

படிக்கவும்:-

1. அரசாணை (நிலை) எண்.192, செய்தி மற்றும் சுற்றுலா (எஅ.2)துறை, நாள் 1.11.1995.

<u>மேலும் படிக்கவும்:-</u>

2. ஆணையர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை கடித எண். 4968/எஸ்.2/2006, நாள் 28.9.2007.

–––

<u>ஆணை:</u>

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் 7.5.2007 அன்று சட்டப் பேரவையில் 2007–08 ஆம் ஆண்டுக்கான எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மானிய கோரிக்கை எண்.30 இன் கீழ் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

> *“அரசு அச்சக ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு தற்பொழுது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை மூன்று ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றது. அதனை நான்கு ஜோடி சீருடைகளாக வழங்கவும், சீருடையின் நீளம் மற்றும் அகலத்தினை அதிகரித்து தையல் கட்டணத்தை உயர்த்தி வழங்கவும் சுமார் ரூ.7.00 இலட்சம் கூடுதல் தொகையினை அரசு ஒதுக்கீடு செய்யும்”.*

2. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசு அச்சகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை கைத்தறியில் இரண்டு ஜோடி சீருடையும் காதியில் ஒரு ஜோடி சீருடையும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான தையல் கூலி ஒரு ஜோடி சீருடைக்கு ரூ.100/–ம் ரவிக்கைக்கு ரூ.20/–ம் வழங்கப்பட்டு வருகிறது.

3. மேலே பத்தி ஒன்றில் கண்டுள்ள அறிவிப்பினைத் தொடர்ந்து பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசு அச்சக பணியாளர்களுக்கு இரண்டாண்டிற்கு ஒரு முறை நான்கு ஜோடி சீருடை வழங்குமாறும், தையல் கூலி ஒரு ஜோடி சீருடைக்கு ரூ.100/–லிருந்து ரூ.200/– ஆகவும், ரவிக்கைக்கு ரூ.20/– லிருந்து ரூ.30/– ஆகவும் வழங்குமாறும், சீருடை

அளவினை பின் வருமாறு உயர்த்தி வழங்குமாறும் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் கோரியுள்ளார் :-

| வ.எண். | பொருள் | தற்போதைய அளவு | | உயர்த்தி வழங்கப்படவுள்ள அளவு | |
|---|---|---|---|---|---|
| | | கைத்தறி | காதி | கைத்தறி | காதி |
| 1. | கால் சட்டை | 1.15 மீட்டர் | 1.20 மீட்டர் | 1.30 மீட்டர் | 1.30 மீட்டர் |
| 2. | மேல் சட்டை | 1.60 மீட்டர் | 1.60 மீட்டர் | 2.00 மீட்டர் | 2.00 மீட்டர் |
| 3. | ரவிக்கை | 0.80 மீட்டர் | 0.80 மீட்டர் | 1.00 மீட்டர் | 1.00 மீட்டர் |
| 4. | புடவை | 5.5 மீட்டர் | 5.5 மீட்டர் | –– | –– |

4. மேலே பத்தி மூன்றில் கண்டுள்ள செயற்குறிப்பை அரசு மிக உன்னிப்பான ஆய்வுக்குப் பின் ஏற்பு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

(அ) அரசாணை (நிலை) எண்.192, செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, நாள் 01.11.1995–இன்படி அரசு அச்சகப் பணியாளர்களுக்கு இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை கைத்தறியில் இரண்டு ஜோடி சீருடையும், காதியில் ஒரு ஜோடி சீருடையும் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி அச்சகப் பணியாளர்களுக்கு நடப்பு ஆண்டு முதல் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை கூடுதலாக ஒரு ஜோடி கைத்தறி சீருடை வழங்கப்படும். அதாவது, அரசு அச்சகப் பணியாளர்களுக்கு இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை கைத்தறி துணியில் மூன்று ஜோடி சீருடைகளும், காதியில் ஒரு ஜோடி சீருடையும் வழங்கப்படும்.

(ஆ) தையற்கூலி ஒரு ஜோடி சீருடைக்கு ரூ.100/– லிருந்து ரூ.200/– ஆகவும், ரவிக்கைக்கு ரூ.20/– லிருந்து ரூ.30/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். கால்சட்டைக்காக வழங்கப்பட்ட கைத்தறித் துணி 1.15 மீட்டரிலிருந்து 1.30 மீட்டராகவும், காதித்துணி 1.20 மீட்டரிலிருந்து 1.30 மீட்டர் ஆகவும், மேல்சட்டை துணி கைத்தறி மற்றும் காதியில் 1.60 மீட்டரிலிருந்து 2.00 மீட்டராகவும், ரவிக்கை 0.80 மீட்டரிலிருந்து 1.00 மீட்டராகவும் உயர்த்தி வழங்கப்படும். புடவையின் அளவில் மாற்றமில்லை.

5. மேலே பத்தி நான்கில் கண்டுள்ள ஆணைகளை செயல்படுத்துவதால் ஆண்டொன்றிற்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.14,69,088/– ஆகும். இந்த ஆண்டு (2007–2008)ல் ஏற்படும் செலவினம் ரூ.5,63,760/– ஆகும். இச்செலவினம் ஒரு தொடர் செலவினமாகும். எனவே இதனை 'புது துணை பணி' குறித்த துணைச் செலவினமாக கருதப்படும். பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் இச்செலவினம் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன் பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன் பணம் பெற எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் உரிய படிவத்தில் நிதி (வரவு செலவு பொது–1)துறைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. பார்வை 1 இல் கண்ட அரசாணை பத்தி–5 இல் கண்டுள்ளபடி தகுதியுடைய அனைத்து பணியாளர்களுக்கும் சீருடை வழங்குவதுடன், தையற்கூலிக்காக பணம்

பெற்றதற்கான ரசீது பெறுதல் முதலிய பொறுப்புகள் தொடர்புடைய அலுவலர்களைச் சார்ந்ததாகும் என்ற நடைமுறையை தொடர்ந்து பின்பற்றுமாறு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி–4 இல் ஆணையிடப்பட்டுள்ளவற்றை செயல்படுத்துவதன் மூலம் ஏற்படும் செலவினத்தை ஆணையர் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை அவர்கள் பின்வரும் கணக்குத் தலைப்புகளில் பற்றெழுத கேட்டுக் கொள்ளப்படுகிறார்:-

| வ.எண். | அலகின் பெயர் | கணக்குத் தலைப்பு |
|---|---|---|
| 1. | ஆணையரகம், சென்னை–2. | 2058 00 எழுதுபொருள் அச்சு – 001 நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் – I திட்டத்தில் சேராதது AA தலைமையிடம் 46 உடைகள் – கூடாரச் செலவுகள் பண்டக சாலைப் பொருட்கள் (த.தொ.கு.2058 00 001 AA 4600) |
| 2. | அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை–1. | 2058 00 எழுதுபொருள் அச்சு 101 எழுதுபொருள் வழங்கி வழங்குதல் I – திட்டத்தில் சேராதது – AA – எழுதுபொருள் அலுவலகம் – பண்டகசாலையும் 46 உடைகள் – கூடாரச் செலவுகள் – பண்டக சாலைப் பொருட்கள் (த.தொ.கு.2058 00 101 AA 4608) |
| 3. | அரசு மத்திய அச்சகம், சென்னை–79. | 2058 00 எழுதுபொருள் அச்சு – 103 அரசு அச்சகங்கள் I – திட்டத்தில் சேராதது AA மத்திய அச்சகம், சென்னை–46 உடைகள் – கூடாரச் செலவுகள் – பண்டகசாலைப் பொருட்கள் (த.தொ.கு.2058–00–103 AA –4604) |
| 4. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை. | 2058 00 எழுதுபொருள் அச்சு – 103 அரசு அச்சகங்கள் – I – திட்டத்தில் சேராதது – (AC) அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை 46 – உடைகள் கூடாரச் செலவுகள் பண்டக சாலைப் பொருட்கள் (த.தொ.கு.2058 00 103 AC 4600) |
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சி. | 2058 00 எழுதுபொருள் அச்சு – 103 அரசு அச்சகங்கள் – I– திட்டத்தில் சேராதது (AD) – அரசு கிளை அச்சகம், திருச்சி – 46 – உடைகள் கூடாரச் செலவுகள் – பண்டக சாலைப் பொருட்கள் (த.தொ.கு.2058 00 103 AD 4608) |
| 6. | அரசு கிளை அச்சகம், சேலம் | 2058 00 எழுதுபொருள் அச்சு 103 அரசு அச்சகங்கள் – I – திட்டத்தில் சேராதது AE அரசு கிளை அச்சகம் சேலம் – 46 – உடைகள் கூடாரச் செலவுகள் – பண்டக சாலைப் பொருட்கள் (த.தொகு.2058 00 103 AE 4606) |
| 7. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 2058 00 எழுதுபொருள் அச்சு – 103 அரசு அச்சகங்கள் – I – திட்டத்தில் சேராதது AF – அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் 46 உடைகள் கூடாரச் செலவுகள் பண்டக சாலைப் பொருட்கள் (த.தொ.கு.2058 00 103 AF 4604) |

| | | |
|---|---|---|
| 8. | அரசு கிளை அச்சகம், மதுரை | 2058 00 எழுதுபொருள் அச்சு – 103 அரசு அச்சகங்கள் – I –திட்டத்தில் சேராதது AG – அரசு கிளை அச்சகம், மதுரை – 46 – உடைகள் கூடாரச் செலவுகள் பண்டக சாலைப் பொருட்கள் (து.தொ.கு.2058 00 103 AG 4602) |
| 9. | அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்றம், சென்னை.104 | 2058 00 எழுதுபொருள் அச்சு – 103 – அரசு அச்சகங்கள்– I– திட்டத்தில் சேராதது – AJ – அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்றம், சென்னை–46 – உடைகள் கூடாரச் செலவுகள் பண்டக சாலைப் பொருட்கள் (து.தொ.கு.2058 00 103 AJ 4606) |
| 10. | சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை. | 2058 00 எழுதுபொருள் அச்சு – 103 அரசு அச்சகங்கள் – I – திட்டத்தில் சேராதது – AK ªê¡¬ù உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை – அரசு கிளை அச்சகம். 46 உடைகள் கூடாரச் செலவுகள் பண்டகசாலை பொருள் (து.தொ.கு.2058 00 103 AK 4602) |

7. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவை அத்துறையின் அ.சா.எண்.39/ இசெ(பி.கே.)/08 நாள் 13.2.2008 மற்றும் கூடுதல் பேரேடு எண்.1831 (ஆயிரத்து எண்ணூற்று முப்பத்து ஒன்று) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ.சந்தானம்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை–2.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், (வடக்கு) சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு) சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
சார்நிலை சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை உயர்நீதிமன்ற கிளை மதுரை–23.
கருவூல அலுவலர், புதுக்கோட்டை/திருச்சி/ சேலம்/கடலூர்.
சார்நிலை கருவூல அலுவலர், விருத்தாசலம்.
நகல்:
நிதி(வ.செ.பொ.I) / (வ.செ.பொ.II) / (து.வ.(ம) செ.)த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(வெ.திருச்செல்வன்)
அரசு சார்புச் செயலாளர்